வெளியீடு எண் 80.

ஆச்சாள்புரத் திருப்பதிகங்கள்

[illegible] A. அருணாசல முதலியார்
அவர்களின் நினைவாக அன்பளிப்பு.
அளிப்பவர்:
திருமதி சிவகாமி அருணாசலம்
(1932) சீர்காழி

தருமபுர ஆதீனம்.

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் 25-வது மகாசந்நிதானம் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள்** திருப்பதிகம் பெற்ற 274 சிவதலங்களிலும் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை செய்யவும், அந்தந்தத் தலத்திருப்பதிகங்களைத் தனித்தனியே சிறுசிறு நூலாக அச்சிட்டு ஆராதனைகாலத்து வழங்கவும் திருவுள்ளங்கொண்டு ஆணையருளியவாறு இந்நூல் வெளியிடப் பெற்றது.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 80

உ
குருபாதம்
திருச்சிற்றம்பலம்

ஆச்சாள்புரத் திருப்பதிகங்கள்

இது
திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
ஆக்ஞைப்படி
வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்
1945

முதற்பதிப்பு
பிரதிகள் 500

தருமபுர ஆதீனம்
ஞானசம்பந்தம் பதிப்பகத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

உ

சிவமயம்

முன்னுரை

வானாகி நிலனாகி அனலு மாகி
மாருதமாய் இருசுடராய் நீரு மாகி
ஊனாகி உயிராகி உணர்வு மாகி
உலகங்கள் அனைத்துமாய் உலகுக்கு அப்பால்
ஆனாத வடிவாகி

விளங்குஞ் சிவபெருமான் "காணாத அருவினுக்கும் உருவினுக்கும் நிகழ்குறியாம்" சிவலிங்கத் திருமேனி தாங்கி, பூ கைக் கொண்டு பொன்னடிபோற்றியும், நாக்கைக் கொண்டு நன்னாமம் நவிற்றியும், வழிபாடு செய்யும் மெய்யன்பர்கள் பொன்னுமெய்ப் பொருளும் போகமும் திருவும் பெறுமாறு அருள்பாலிக்குந் தலங்கள் எண்ணிறந்தன. அவைகளுள் "சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் இல்லை; அவனோடொப்பார் இங்கு

யாவருமில்லை" என்ற உண்மையினைத் திருவருட்டுணைகொண்டு பற்பல அற்புதச் செயல்கள் வாயிலாக உலகமக்களுக்கு அறிவித்த சமயாசாரியர்களால் திருவாய்மலர்ந்தருளப்பெற்ற திருப்பதிகங்கள் கொண்ட திருத்தலங்கள் இருநூற்றெழுபத்து நான்கென மேலோர்கள் எண்ணிக் கணக்கிட்டுள்ளார்கள். **திருநல்லூர்ப்பெருமணம்** என்னும் இத்தலம் அவைகளில் ஒன்றாகும். சிவதல யாத்திரை செய்துவந்த பிரமதேவர் இத்தலத்திற்கு வந்ததும் இதன் சிறப்பியல்புகளைக்கண்டு "இஃது ஓர் நல்லூராகும்" என்றமையால் இப்பெயர் பெற்றது.

இத்தலம் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான தலங்களுள் ஒன்றாகும். இக்காலத்தில் **ஆச்சாள்புரம்** என வழங்கப்படுகிறது. மேலும் சிவலோகம், திருமணவை, முத்திபுரம் என்னும் பிறபெயர்களும் உள்ளன என்று தலபுராணம் கூறுகின்றது. இறைவன் திரு

நாமம் **சிவலோகத்தியாகர்.** இறைவி திருநாமம் **திருவெண்ணீற்றுமை.** இது இத்தலப்பதிகம் ஏழாவது திருப்பாடலில் காணப்படுகிறது.

திருநீறணிந்து, கண்டிகைபூண்டு, ஐம்புல னடக்கி, அஞ்செழுத்தோதிப் பதினாயிரம் வருடங்கள் செயற்கரிய தவஞ்செய்த வசிட்டர் முதலிய முனிகணங்கட்குச் சிவலோகக் காட்சியளித்த சிறப்பினையுடையது இத்தலம். இஃதன்றி அயோத்திநகரத்து அரசனை மாந்தாதா என்பவன் தனதுகுருவான வசிட்ட முனிவர் வாயிலாக இதன் பெருமையறிந்து இங்குவந்து ஆலயத் திருப்பணி செய்து, தீர்த்தத்திற்குப் படித்துறையமைத்து நந்தனவனங்கள் தோற்றுவித்து வழிபாடு செய்த சிறப்பும், கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங்கொண்ட முருகப்பிரான் பூசித்த சிறப்பும் உடையன. நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பிய திருஞானசம்பந்தப் பிள்ளையார் தம் திருமணத்தில் "ஆறுவகைச் சமயத்

தில் அருந்தவரும், அடியவரும், கூறுமறை முனிவர்களும், கும்பிடவந்து அணைந்தாரும், வேறு திருவருளினால் வீடுபெற வந்தாரும் ஆகிய எல்லோரையும் ஈறில்பெருஞ் சோதியினுள் புகுவித்துத் தாமும் காதலியைக் கைப்பற்றிக்கொண்டு புகுந்து பிறவா இன்பப் பெருநெறி பெற்ற பெருஞ் சிறப்பினைத் தனக்கே உரிமையாகக்கொண்டது இத்தலமே.

திருக்கயிலாயபரம்பரைத் தருமபுர ஆதீனத்தில் இருபத்தைந்தாவது குருமகா சந்நிதானமாக எழுந்தருளியிருந்து அருட்செங்கோல் செலுத்திவருகின்ற **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள் அவர்கள்** தாம் ஞானபீடத்தில் எழுந்தருளியது முதல் "சைவசமயத்தை யாங்கணும் பரப்பவேண்டும்; அதன் உண்மையினை யாவரும் அறியச்செய்யவேண்டும்" என்பதையே குறிக்கோளாகக்கொண்டு செய்தருளுகின்ற பணிகள் பலவாகும். அவைகளுள் ஆதீனச்

சார்பில் சிவதலங்கள்தோறும் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனை செய்வித்தலும், ஆராதனை காலத்தில் அந்தந்தத் தலப்பதிகங்களை முறைப்படி ஓதச்செய்து ஒவ்வொரு பதிகத்தின் முடிவிலும் கற்பூர ஆராதனை செய்யச் செய்தலும், பதிகங்களைத் தனியே சிறுசிறு புத்தகமாக அச்சிடுவித்து அன்பர்கட்கு வழங்கச்செய்தலும் ஒன்றாகும். அத் திருவுள்ளப்பாங்கின்படியே இந்நூல் வெளி வந்துள்ளது. அன்பர்கள் பதிகங்களைப் பாராயணஞ்செய்து ஸ்ரீ சிவலோகத்தியாகப் பெருமான் திருவருளைப்பெற்று நீடுவாழ்வார்களாக.

திருஞானசம்பந்தர் திருமணம்

உரவார் கலையின் கவிதைப்புலவர்க்கொரு நாளும் கரவா வண்மைக் கற்றவர் சேரும் சீகாழிப்பதியில், மாதவத்தோர் வாழவும், வையகத்தோர் உய்யவும், மேதக்க வானோர் வியப்பவும், ஆதியாம் வென்றிக் கலிகெடவும், வேதத்தொலிமிகவும், ஒன்றிச் சிவனடியார் ஓங்கவும், பன்னுதமிழப் பதினாறுயிர நற்பனுவல் மன்னுபுவியர்க்கு வாய்ப்பவும், சீரார் கவுணியர்க்கு ஓர் சேயென்ன வந்து அவதரித்த வள்ளலாகிய திருஞானசம்பந்தப் பிள்ளையார் மூன்றும் வயதிலே உமையம்மையாரால் அளிக்கப்பட்ட எண்ணரிய சிவஞானத்தின்னமுதத்துடன் கூடிய திருமுலைப் பாலை அருந்தி இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்று சுட்டிக் காட்டமுடியாத பரம்பொருளைச் சுட்டிக் காட்டினார். பின்னர், தலயாத்திரையில் விருப்புற்றுத் தலங்கடோறுஞ் சென்று பெரு

மானை வணங்கி அப்பெருமானால் 'பொற்றாளம், படிக்காசு, முத்துச்சிவிகை, முத்துக்குடை, பொற்கிழி முதலியன தரப்பெற்று அப்பெருமானைத் தோத்தரிக்கும் வாயிலாக, ஆன்மாக்கள் பிறவிச் சாகரத்தினின்றும் கரையேறி உய்தற்பொருட்டுப் பத்தித்தனித் தெப்பமாகிய தித்திக்கும் திருப்பாடல்களை அருளிச்செய்தார். அதுமாத்திரமா ?

வேதவனத்தில் வேதங்களினால் அடைக்கப்பட்டுத் திருநாவுக்கரசு சுவாமிகளாலே திறக்கப்பட்ட திருக்கதவை முன்போலவே அடைக்கப்பாடினார்; திருநனிபள்ளியில் பாலை நிலத்தை நெய்த நிலமாக்கினார்; திருப்பாச்சிலாச்சிராமத்தில் கொல்லிமழவன் மகளைப் பற்றி இருந்த முயலகன் என்னும் அரும்பிணியை நீக்கினார்; திருமருகலில் ஓர் வணிக மகளுக்கு ஏற்பட்ட ஆற்றொணாத்துன்பத்தை நீக்கற் பொருட்டு விடத்தினால் உயிர்நீத்த அவள் கணவனை உயிருடன் எழும்படிச்

செய்தார்; பாண்டிநாடு சென்று அனல் வாதம், புனல்வாதம் முதலியவைகளால் சமணநெறியினை அழித்து பாண்டிய அரசனுடைய கூனையும் சுரத்தையும் நீக்கியருளினார்; திருக்கொள்ளம்பூதூருக்குச் செல்லுங்கால் காவிரியாற்றிலே அடியார்களோடு ஓடத்திலேறி செலுத்துவோர் இல்லாமலே "கொட்டமேகமழும்" என்னும் பாசுரமருளி ஓடம் தானாகவே அக்கரைசேரும்படிச் செய்தார்; திருத்தெளிச்சேரியிலிருந்து போதிமங்கை என்னும் ஊர்வழியாகச் செல்லும்பொழுது அடியவர்களது மங்களமுழங்கக் கேட்டு எதிர்த்துவந்த புத்தநந்தியின் செயல் கண்ட ஒரு அடியவர் சுவாமிகள் முன் அருளிய தேவாரப் பாவொன்றினைக்கூறி அவன் தலையில் இடி விழும்படிச் செய்தருளினர். இஃது உணர்ந்த பிள்ளையார் திருவருளைச் சிந்தித்து மகிழ்ந்தருளினார்கள்; திருவோத்தூரில் சிவனடியார் வேண்டுகோளுக் கிணங்கி ஆண் பனைகளைப் பெண்பனைகளாக்கினார்; திரு

மயிலாப்பூரில் அரவந்தீண்டி அதனால் உயிர் நீத்த பூம்பாவை என்னும் வணிகமகளுடைய எலும்புகளை, அவள் தந்தையார் வேண்டு கோட்கிணங்கிப் பூம்பாவையாகவே எழச் செய்தார்.

இப்படியாக ஆங்காங்கும் இறைவன் திருவருட்டுணைகொண்டு பற்பல அற்புதச் செயல்களைச் செய்தருளி அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய், வேறுங்குறியது உடைத்தாய், அம்மையோடப்பனாய் விளங்கும் சிவனே பரம்பொருள் என்னும் உண்மையினை நிலைநாட்டி. இறுதியாக அவதார ஸ்தலமாகிய சீகாழியை அடைந்தார். இவ்வாறிருக்குங்காலத்தில் ஒரு நாள் பெற்றோர்கள் ''வேள்விபல புரிவதற்கோர்கன்னிதனை வேட்டருளவேண்டும்'' என்றுகூறப் பிள்ளையார் அதற்கு இசைந்தாரில்லை. ஆயினும் அவர்கள் மேலும் மேலும் வற்புறுத்துவதால் உடன்பட்டார். உடனே திருநல்லூர்ப் பெரு

மணமாகிய ஆச்சாள்புரத்தில்வாழும் நம் பாண்டார் நம்பிகள் மகளைத் திருமணஞ் செய்துவைப்பதாக ஆன்றோர்களால் முடிவு செய்யப்பட்டது.

திருக்கல்யாணத்தின் முதல் நாள் பிள்ளையார் மணக்கோலம் பூண்டு அடியார்களும் சுற்றத்தார்களும் உடன்வர திருநல்லூர்ப் பெருமணத்திற்கு எழுந்தருளி ஆலயத்தை அடைந்து பெருமானை அன்போடு பணிந்து ஓர்மடத்தில் தங்கினர். திருமண நாளன்று மணமக்களிருவரையும் அலங்கரித்து மணி மண்டபத்தில் எழுந்தருளச் செய்யப் பெற்றது. திருநீலநக்கர் வேத விதிப்படி திருக்கல்யாணச்சடங்குகளை நடத்தினர். ஆளுடைய பிள்ளையார் மணமகள் கையினைப்பற்றி சிவாக்கினியை வலம்வருங்கால் "அங்கியாவார் விடையுயர்த்தவரே" என்று எண்ணி சிந்தை தெளிந்து "இந்த இல் ஒழுக்கம் வந்து சூழ்ந்ததே இவள் தன்னோடும் அந்தமில்

சிவன் தாள் சேர்வன்" என்னும் ஆதரவு பொங்க, பெருங்கிளையும் தொண்டர் கூட்டமும் சூழ மெய்ஞ்ஞானத்தெல்லை அடைவுறும் குறிப்பினாலே கோயிலை நோக்கிச் சென்றார்; பெருமானைப் பணிந்தார்; கல்லூர்ப் பெருமணம் என்னும் பதிகம் பாடத்தொடங்கி "நாதனே! நல்லூர்மேவும் பெருமண நம்பனே! உன் பாத மெய்ந்நீழல் சேரும் பருவம் ஈது" என்று அருளிச்செய்தார்.

இவ்வேண்டுகோளைச் செவிமடுத்த எம்பெருமான் "நீயும் பூவையன்னாளும், இங்கு உன் புண்ணிய மணத்தின் வந்தார் யாவரும் எம்மிடத்துத் தோன்றும் சோதியினிடத்து வந்து அடையுங்கள்" என்று அருளிக் கோயிலும் தன்னுளடங்க முழுச்சுடர்த்தாணுவாகி நின்று வாயிலும் வகுத்துக்காட்டினார். அது கண்ட பிள்ளையார் தொழுது போற்றி ஞான மெய்ந்நெறிதான் யார்க்கும் நமச்சிவாயச் சொல்லாம் என்று ஆனசீர் நமச்சிவாயத்

திருப்பதிகத்தை வானமும் நிலனும் கேட்க அருளிச் செய்து "இம்மணத்தில் வந்தோர் யாவரும் ஈனமாம் பிறவிதீரப் புகுக" என்றனர். வருமுறைப் பிறவிவெள்ளம் வரம்பு காணு தழுந்தி உருவெனுந் துயரக் கூட்டில் உணர்வின்றி மயங்கும் மக்கள் யாவரும், திருநீலநக்கர் திருமுருகர் முதலிய அடியார்களும், சிவபாத இருதயர், நம்பாண்டார், திருநீலகண்ட யாழ்ப்பாணர் முதலியோரும், தத்தம் இல்லாளோடு சோதியினுட் புக்கனர். முடிவில் பிள்ளையாரும் தம்காதலியாருடன் சோதியினை வலம்வந்து புகுந்து ஒன்ருயினர். உடனே சோதி வடிவம் மறைய முன்னிருந்த ஆலயம் விளங்கிற்று. இப்பேறு கிட்டாத விண்ணவரும் முனிவர்களும் விரிஞ்சன் முதல் எல்லோரும் ஏக்கமுற்று வணங்கித் துதித்தார்கள்.

பதிகத்தில் காணப்படும் குறிப்புக்கள்

ஊர்:- கடற்கரையின் அருகே விளங்குவதால் மணற்பாங்காயுள்ளது; கடற்றிரைகளால் ஒதுக்கப்பட்ட முத்துக்கள் நிறைந்தது; விளையாட்டுப் பருவமுள்ள பாவைமார்கள் அம்முத்துக்களை மணலாகக்கொண்டு அதனைக்குவித்து பதுமைசெய்து விளையாட்டுக் கலியாணம் செய்யும் சிறப்புடையது; நல்லியலார்தொழுவது; நட்டக்கொட்டொலி நீங்கப்பெறுதது; அன்புறுசிந்தையராகிய அடியவருக்கு நன்மையளிப்பது.

பெருமான்:- புலித்தோலுடையினர்; யானைத்தோல் போர்த்தவர்; எளியவாழ்க்கையர்; இடப வாகனத்தை உகந்தவர்; இடுகாட்டெரியில் ஆடுபவர்; நீறுபூசியவர்; கொன்றைமாலை யணிந்தவர்; மேகம்போன்ற கண்டத்தர்; எண்டோளர்; உமையொருபாகர்; நாகமணிந்தவர். இத்தகைய பெருமானை வணங்

கினவர்கள் துன்புறுவாரல்லர். தாள்தொழ விடு எளிதாம்.

நமச்சிவாய:- இது உலகுக்கு செம்பொற்றிலகமாயது; மணம் நிறைந்த புதிய மலரினின்றும் ஒழுகும் மதுவினை ஒத்து இனிமை பயப்பது; வேதநான்கினும் மெய்ப்பொருளாயது; அடுக்கலின்கீழ் அகப்பட்ட இராவணனும் திருமாலும் பிரமனும் ஓதி அருள் பெற்றது. இதனைக் காதலொடு மனமுருகிக் கண்ணீர் பொழிய ஓதுதல் வேண்டும். உருத்திராக்கமாலைகொண்டு எண்ணி உச்சரித்தல் வேண்டும். அப்படி உச்சரித்தால் நன்னெறியடையலாம்; வானவராகலாம்; உருத்திரலோகம் சாரலாம்; இயமதூதுவர்களையும் அச்சுறுத்தலாம்; கொலைமுதலாகிய எல்லாப் பாவங்களும் நீங்கப்பெறலாம்; வல்வினை சிந்தும்; செல்வம் மல்கும்; பொதுவாக எவ்வகைத் தீங்கும் நீங்கும்.

சிவமயம்

திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகங்கள்

பண் - அந்தாளிக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணஞ் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமண மேயநம் பானே. 1

தருமண லோதஞ்சேர் தண்கட னித்திலம்
பருமண லாக்கொண்டு பாவைநல் லார்கள்
வருமணங் கூட்டி மணஞ்செயு நல்லூர்ப்
பெருமணத் தான்பெண்ணோர் பாகங்கொண் டானே.

அன்புறு சிந்தைய ராகி யடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவிநின்
றின்புறு மெந்தை யிணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டுசெய் வாரே. 3

வல்லியந் தோலுடை யார்ப்பது போர்ப்பது
கொல்லியல் வேழத் துரிவிரி கோவணம்
நல்லிய லார்தொழு நல்லூர்ப் பெருமணம்
புல்கிய வாழ்க்கையெம் புண்ணிய னார்க்கே. 4

ஏறுகந் தீரிடு காட்டெரி யாடிவெண்
ணீறுகந் தீர்நிரை யார்விரி தேன்கொன்றை
நாறுகந் தீர்திரு நல்லூர்ப் பெருமணம்
வேறுகந் தீருமை கூறுகந் தீரே. 5

சிட்டப்பட் டார்க்கெளியான் செங்கண் வேட்டுவப்
பட்டங்கட் டுஞ்சென்னி யான்பதி யாவது
நட்டக்கொட் டாட்டறா நல்லூர்ப் பெருமணத்
திட்டப்பட் டாலொத்தி ராலெம் பிரானிரே. 6

மேகத்த கண்டனெண் டோளன்வெண் ணீற்றுமை
பாகத்தன் பாய்புலித் தோலொடு பந்தித்த
நாகத்த னல்லூர்ப் பெருமணத் தானல்ல
போகத்தன் யோகத்தை யேபுரிந் தானே. 7

தக்கிருந் தீரன்று தாளா லரக்கனை
உக்கிருந் தொல்க வுயர்வரைக் கீழிட்டு
நக்கிருந் தீரின்று நல்லூர்ப் பெருமணம்
புக்கிருந் தீரெமைப் போக்கரு ளீரே. 8

ஏலுந்தண் டாமரை யானு மியல்புடை
மாலுந்தம் மாண்பறி கின்றிலர் மாமறை
நாலுந்தம் பாட்டென்பர் நல்லூர்ப் பெருமணம்
போலுந்தங் கோயில் புரிசடை யார்க்கே. 9

ஆதர மணொடு சாக்கியர் தாஞ்சொல்லும்
பேதைமை கேட்டுப் பிணக்குறு வீர்வம்மின்
நாதனை நல்லூர்ப் பெருமண மேவிய
வேதனை தாடொழ வீடெளி தாமே. 10

நறும்பொழிற் காழியுண் ஞானசம் பந்தன்
பெறும்பத நல்லூர்ப் பெருமணத் தானை
உறும்பொரு ளாற்சொன்ன வொண்டமிழ் வல்லார்க்
கறும்பழி பாவ மவல மிலரே. 11

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாயத் திருப்பதிகம்

பண் - கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாம நமச்சி வாயவே. 1

நம்பு வாரவர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில கம்முல குக்கெலாம்
நம்ப னாம நமச்சி வாயவே. 2

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்நினைந்
தக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்க னாம நமச்சி வாயவே. 3

இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலால்
நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயன னாம நமச்சி வாயவே. 4

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனு மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவ ரென்பரால்
நல்லார் நாம நமச்சி வாயவே. 5

மந்த ரம்மன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமு மல்குமால்
நந்தி நாம நமச்சி வாயவே. 6

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயி னுருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரத னாம நமச்சி வாயவே. 7

இலங்கை மன்ன னெடுத்த வடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொ ளாம நமச்சி வாயவே. 8

போதன் போதன கண்ணனு மண்ணறன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி யலந்தவர்
ஓது நாம நமச்சி வாயவே. 9

கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொன் மிண்டர் விரவில ரென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட வமுதுசெய்
நஞ்சுண் கண்ட னமச்சி வாயவே. 10

நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யான்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம்
பந்த பாச மறுக்கவல் லார்களே. 11

திருச்சிற்றம்பலம்